**<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>**

**<u>O.S.No.241/2018</u>**

2022-ம் ஆண்டு ஜீன் மாதம் 28-ஆம் நாள் பி.வா.சா. 5 சாட்சி திரு.ராஜ்குமார் என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969 ம் ஆண்டு 24 வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி உயர்திரு.என்.ஷர்மிளா, பி.ஏ., பி.எல்., சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.ராஜ்குமார் | வயது | : |
| த/பெ | : | சாதி | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | தொழில் | : |

**<u>பி.வா.சா.5 முதல் விசாரணை:</u>**

நான் இவ்வழக்கில் சாட்சி ஆவேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 7 உள்ள கையெழுத்து என்னுடையது தான். பி.வா.சா.ஆ.7 யார் என்னை சாட்சி கையெழுத்திட அழைத்தார்கள் என்றால் மகேந்திரன், சாந்தி, பழனிச்சாமி ஆகியோர்கள். அவர்கள் என்ன சொல்லி அழைத்தார்கள் என்றால் சாந்தி மகேந்திரனுக்கு வட்டிக்கு கடன் கொடுப்பதற்க்காக அழைத்தார்கள். எத்தனை லட்சம் கடன் கொடுப்பதாக கூப்பிட்டார்கள் என்றால் ரூ.5,00,000. எங்கு சென்று பத்திரம் எழுதப்பட்டது என்றால் ஈஸ்வரன் கோயிலுக்கு எதிர்புறம் உள்ள பத்திரம் எழுதும் அலுவலகத்தில் எழுதப்பட்டது. அங்கே யார் இருந்தார்கள் என்றால் சாந்தி, பழனிச்சாமி, மகேந்திரன், பத்திரம் எழுதுபவர் மேலும் 2 மற்றும் 3 பேர் இருந்தார்கள் அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. நான் அந்த பத்திரத்தில் கையெழுத்து போட்டேன் படித்து காண்பித்தார்களா என்றால் இல்லை. அந்த பத்திரத்தை நான் படித்து பார்த்தேனாா என்றால் இல்லை. அதில் என்ன சொல்லி கையெழுத்து வாங்கினார்கள் மகேந்திரனுக்கு ரூ.5,00,000/-ஐ கடன் கொடுப்பதாக சொல்லி தான் வாங்கினார்கள். பணம் அப்பொழுது கொடுத்தார்கள் பதிவு அலுவலகத்தில் கையெழுத்து போட்ட பிறகு பழனிச்சாமியும், சாந்தியும், மகேந்திரனுக்கு பணம் கொடுத்தார்கள். பழனிச்சாமியை எனக்கு நன்கு தெரியுமா என்றால் தெரியும். எப்படி தெரியும் என்றால் பழனிச்சாமி வண்டியில் நான் வேலை செய்வதற்கு மெட்ரியல் எடுத்து வருவேன் அதனால் தெரியும். பழனிச்சாமி வீடு, மகேந்திரன் வீடு எனக்கு தெரியும். தாவா வீட்டில் இன்றுவரை யார் குடியிருக்கிறார்கள் எனக்கு தெரியுமா என்றால் மகேந்திரன்

குடியிருக்கிறார். மகேந்திரன் லேத் பட்டறை தொழில் செய்து வருகிறார். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.7 கடனுக்காக தான் என்று சொல்லி எழுதப்பட்டது. சாட்சி சம்மன் வந்த பிறகு எதற்க்காக அழைப்பாணை வந்தது என்று நான் தெரிந்துகொண்டேன்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 9-ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். பொய் பத்திரத்தில் கையெழுத்து போடுவேன் என்றால் இல்லை. பத்திரங்களில் சாட்சி கையெழுத்து போடும்போது படித்து பார்த்து தான் கையெழுத்து போட வேண்டுமென்று எனக்கு தெரியுமா என்றால் பழக்கப்பட்டவர்கள் கூப்பிட்டதால் கையெழுத்து போட்டேன். கடனுக்காக எழுதப்பட்டதால் தொழில் நஷ்டம் ஆகிவிட்டது பணம் வாங்கினார் அதனால் கையெழுத்து போட்டேன். என்னுடன் யார் சாட்சி கையெழுத்து போட்டார் என்றால் கண்ணன் என்பவர் கையெழுத்து போட்டார். அவர் எந்த ஊர்க்காரர் என்றால் எனக்கு தெரியாது. மகேந்திரன் எத்தனை வருடம் பழக்கம் என்றால் நான் குழந்தையாக இருக்கும்போதே எனக்கு தெரியும். நான் கையெழுத்து ஆங்கிலத்தில் போடுவேனா என்றால் தமிழில் போடுவேனா என்றால் ஆங்கிலத்தில் போடுவேன். இன்று வரை அந்த பத்திரத்தை வாங்கிப்பார்த்தேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல சம்மன் வந்ததா என்றால் வந்தது. அந்த சம்மனில் எதற்க்காக சாட்சி சொல்ல வேண்டும் என்று உள்ளதா என்றால் தெரியவில்லை. அது **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இங்கு வந்து சாந்தியை விசாரிக்கும்போது தான் சம்மன் இதற்க்காக தான் சம்மன் வந்தது என்று தெரிந்துகொண்டேன். சாந்திக்கு மகேந்திரன் எழுதிக்கொடுத்த கிரய உடன்படிக்கை பத்திரம் என்று தெரிந்து கொண்டு தான் கையெழுத்துபோட்டுள்ளேன் என்றால் இல்லை. கடன் கொடுத்தார்கள் அதற்கு தான் கையெழுத்து போட்டேன். மகேந்திரனுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.